**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| D.W.2 | பெயர் : திரு.காமராஜ்<br>த/பெ : திரு. பாண்டி | O.S.No.84/2019 | 24.06.2026 |
|---|---|---|---|

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பில் பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் கண்ட சொத்து ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கில் கண்ட சொத்தினை 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. வழக்கில் கண்ட சொத்தினை 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

ஒரு சொத்து பதிவு செய்யப்பட்டால் மட்டும்தான் அது வில்லங்கத்தில் துலங்கும் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்பதால்தான் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் துலங்கவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தினைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் (வா.சா.ஆ.3) என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான், அது முன்பே எழுதப்பட்ட பத்திரம் ஆகும். வழக்கு சொத்தினைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகுதான் எனக்கு 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தினைப் பொறுத்து கிரையம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால், 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

வழக்கு சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகுதான் 1ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்தார் என்று சொன்னாலும் மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னாலும் நான் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு வழக்கு சொத்தினைப் பொறுத்து கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்ததால் அதன் பின்னர் 1ம் பிரதிவாதி எனக்கு வழக்கு சொத்தினைப் பொறுத்து கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால், 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை, நான் சொத்து வாங்கும் சமயத்தில் வில்லங்கத்தில் மேற்படி விவரங்கள் எதுவும் துலங்கவில்லை. 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னாலும் அந்த விவரம் தெரிந்த பின்னரும் நான் 1ம் பிரதிவாதியிடம் வழக்கு சொத்தினைப் பொறுத்து கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல.

1ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.2 ஆவணம் எனக்கு எழுதிக் கொடுக்க சட்டப்படி எந்த ஒரு உரிமையும் இல்லாததால் அவர் எழுதிக் கொடுத்த பி.வா.சா.ஆ.2 ஆவணம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் சட்டப்படி செல்லாது என்று சொன்னாலும் அதனால் மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் நான் வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்று சொன்னாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் என்னிடம்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணம் பிறப்பிக்கப்பட்ட காலகட்டத்தில் வழக்கு சொத்தின் அனுபவம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பாக மூல பத்திரத்தின் நகல் பெற்று சொத்தில் வில்லங்கம் இல்லை என்று உறுதி

செய்யப்பட்ட பின்னரே 1ம் பிரதிவாதிக்கு ரூ.1,20,000/–ஐ கிரையத் தொகையாக செலுத்தி வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள கடைக்கு கிரையத் தொகையை செலுத்தி கிரைய காலம் முதல் தனித்து அனுபவித்து வரும் நல்லெண்ண கிரையதாரர் என்று நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையத் தொகையாக ரூ.1,20,000/– என்னிடம் பெற்றுக் கொண்டதாகவும் பணம் பறிக்கும் எண்ணத்துடன் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் கூட்டாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் வில்லங்கம் இல்லை என்பதையும் சொத்தானது 1ம் பிரதிவாதியின் தனித்த அனுபவத்தில் இருப்பதையும் உறுதி செய்த பின்னரே கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதி இறந்து விட்ட நிலையில் 1ம் வாதி பெயரில் இறந்த நபரின் பெயரில் கிரைய ஆவணம் பதிவு இயலாது என்றும் மேற்படி ஆவணத்தில் நான் தரப்பினர் அல்ல என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை பதிவு செய்து கொடுக்குமாறு என்மீது தீர்ப்பு கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்று நான் கூறுவது சட்டப்படி தவறு என்று சொன்னால் சரியல்ல.

நான் 28.12.2017 தேதியில் சொத்தின் உரிமையாளரான சரியான மறுபயனுக்காக எனக்கு பிறப்பிக்கப்பட்டு கொடுத்துள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் வழக்கின் முழு சொத்தும் எனக்கு ஏற்பட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து இந்நாள் வரை வாதியின் அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளுக்கு எதிராக கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்

என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd)M. Siva Rajesh,24/06/2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.